2nd November 1966]

The Government have decided that the following criteria should be adopted in determining the eligibility for assistance under the new scheme :—

(i) the proposed beneficiary must be a landless poor ;

(ii) he must not own a house or house-sites in his name or in the name of his wife or minor children ; and

(iii) the income of his family (excluding that of the independent children) should be less than Rs. 1,200 per annum.

சமதர்மக் குறிக்கோள்களைச் சாதிக்கும் நடவடிக்கையாகவும் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் தாழ்ந்துள்ள சமூகததினருக்குக் குறைந்தளவு வாழ்க்கை வசதிகளையாவது ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் நோக்கத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, ஜாதி வித்தியாசம் கருதாது அவர்களின் பொருளாதார நிலையை மட்டுமே கருத்தில்கொண்டு ஏழை மக்கள் அனைவருக்கும் வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்து அளிக்கும் வகையில் திட்டத்தை விரிவாக்க அரசாங்கம் தற்போது கருதியுள்ளது. முதலில் இத்திட்டம் சிறு அளவில் மேற்கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட 10 இடங்களில் நடப்பு ஆண்டிலேயே இத் திட்டத்தைச் செயல்படுத்த எண்ணியுள்ளது. இதற்கென ரூ. 25 லட்சம் செலவுத்தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் இடங்கள் குறித்துக் கலெக்டரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

இப்புதியத் திட்டத்தின்கீழ் பெறுதற்கான தகுதியினைக் குறித்துத் தீர்மானிக்கையில் கீழ்க்கண்ட மூகாந்திரங்களைக் கவனிக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது :—

(i) இதனால் பலனடையப் போகிறவர் நிலமற்ற ஏழையாக இருக்க வேண்டும்.

(ii) அவரது பெயரில் அல்லது அவருடைய மனைவி பெயரில் அல்லது மைனர் குழந்தைகள் பெயரில் வீடோ அல்லது வீட்டு மனையோ அவருக்குச் சொந்தமாயிருக்கக்கூடாது.

(iii) அவரது குடும்ப வருமானம் (தனித்து வாழும் அவருடைய குழந்தைகளின் வருமானம் (ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,200-க்குக் குறைவாக இருக்கவேண்டும்.

APPENDIX V.

[*Vide* answer to starred question No. 332 at pages 30-31.]

(a) The following seventeen Panchayat Unions in South Arcot district have no Primary Health Centres at present :—

1 Kallakurichi
2 Thyagadurgam
3 Vanur
4 Vikravandy
5 Mailam
6 Rishivandiam
7 Olakkur
8 Mel Bhuvanagiri
9 Komaratchi
10 Kattumannarkoil
11 Sankarapuram

[2nd November 1966

12 Thiruvennainallur

13 Nallur

14 Thirukoyilur

15 Vallam

16 Virudhachalam

17 Kammapuram

(*b*) Out of the seventeen Panchayat Unions, Primary Health Centres have already been sanctioned for the following six Panchayat Unions :—

1 Kallakurichi

2 Thyagadurgam

3 Vanur

4 Vikravandy

5 Mailam

6 Rishivandiam

In the case of the remaining eleven Panchayat Unions, orders sanctioning the opening of Primary Health Centres for nine more Panchayat Unions will be issued during 1966–67. The opening of Primary Health Centres for the Virudhachalam and Kammapuram Panchayat Unions will be taken in due course, when they enter into the maintenance phase of the National Malaria Eradication Programme.

(அ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பின்வரும் பதினேழு பஞ்சாயத்து யூனியன்களில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லை :—

1 கள்ளக்குறிச்சி

2 தியாகதுர்க்கம்

3 வானூர்

4 விக்கிரவாண்டி

5 மைலம்

6 ரிஷிவந்தியம்

7 ஒலக்கூர்

8 மேல் புவனகிரி

9 கொமராக்ஷி

10 காட்டுமன்னார்கோயில்

11 சங்கராபுரம்

12 திருவெண்ணெய்நல்லூர்

13 நல்லூர்

14 திருக்கோயிலூர்

15 வல்லம்

16 விருத்தாசலம்

17 கம்மாபுரம்.

(இ) இந்தப் பதினேழு பஞ்சாயத்து யூனியன்களில், பின்வரும் ஆறு பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க ஏற்கெனவே ஒப்பளிப்பு வழங்கப்பட்டு விட்டது :—

1 கள்ளக்குறிச்சி
2 தியாகதுர்க்கம்
3 வானூர்
4 விக்கிரவாண்டி
5 மைலம்
6 ரிஷிவந்தியம்.

எஞ்சியுள்ள பதினொன்று பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில் ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க 1966-67-ல் ஒப்பளிப்பு ஆணைகள் பிறப்பிக்கப்படும். விருத்தாசலம், கம்மாபுரம் பஞ்சாயத்து யூனியன்கள் மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் பராமரிப்பு நிலையை அடையும்போது, இவ்விரு யூனியன்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தும் வேலை மேற்கொள்ளப்படும்.

APPENDIX VI.

[*Vide* answer to starred question No. 335 at page 32.]

The Government, in 1964, sanctioned the opening of a Primary Health Centre in Karambakudi Block by converting the existing Government dispensary at Karambakudi. But the Chairman, Karambakudi Panchayat Union, requested the Government to open the Primary Health Centre at Malaiyur in Karambakudi block stating that an extent of 3·94 acres of lands had been donated for the construction of the Centre and that a well was also sunk in that site. Suitable buildings on rent are also available at Malaiyur till permanent buildings are constructed. Hence, the Government ordered the opening of the Primary Health Centre at Malaiyur in Karambakudi Block cancelling the previous orders to convert the Government dispensary at Karambakudi into a Primary Health Centre.

கரம்பக்குடி வட்டாரத்தில் தற்பொழுதுள்ள அரசாங்க மருந்தகத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றுவதன் மூலம் அத்தகைய நிலையம் ஒன்றை அங்கு நிறுவ அரசாங்கம் 1964-ல் அனுமதியளித்தது. ஆனால், கரம்பக்குடி பஞ்சாயத்து யூனியன் தலைவர், கரம்பக்குடி வட்டாரத்தில் உள்ள மழையூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டுவதற்கென 3·94 ஏக்கர் நிலம் நன்கொடையாக அளிக்கப்பட்டு, அதில் ஒரு கிணறும் தோண்டப்பட்டுள்ளதென்றும், எனவே ஆரம்பச் சுகாதார நிலையத்தை அங்கு ஏற்படுத்தலாம் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். மழையூரில் நிலையான கட்டிடங்கள் கட்டும் வரை மேற்படி நிலையத்தை நடத்தப் பொருத்தமான கட்டிடங்களும் வாடகைக்குக் கிடைக்கின்றன. எனவே, அரசாங்கம் கரம்பக்குடியில் உள்ள அரசாங்க மருந்தகத்தை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றவேண்டுமென்ற தனது முந்திய உத்தரவை மாற்றி, கரம்பக்குடி வட்டாரத்தில் உள்ள மழையூரில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தது.